செ.வெ.எண்: 3

நாள்: 04/01/2018

# காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழும தேர்விற்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் தொடங்கவுள்ளது குறித்த பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் மூலம் இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்போர் பதவிகளுக்கான பொதுத் தேர்வு மூலம் 6140 பணியாளர்களை தேர்வு செய்வதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. தேர்வு எதிர்வரும் மார்ச்/ஏப்ரல் 2018–ல் நடைபெறுகிறது. இந்த தேர்வில் கலந்து கொள்பவர்களுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் முன் அனுபவம் உள்ள ஆசிரியர்களை கொண்டு குறைந்த கட்டணத்தில் நடத்தப்பட உள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினர்களுக்கும், இந்த பயிற்சி நிலையத்தில் கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சி முடித்த மாணவ மாணவிகளுக்கும் கட்டண சலுகை அளிக்கப்படுகிறது.

இந்த பயிற்சிக்கான விண்ணப்பங்கள் 04.01.2018 (வியாழக்கிழமை) முதல் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தால் வழங்கப்படுகிறன்றன. விண்ணப்பங்களை பேரறிஞர் அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலைய அலுவலகத்தில் விடுமுறை நாட்கள் உள்ளிட்ட அனைத்து நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கான பயிற்சி வகுப்புகள் வார விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளிலும், அரசு விடுமுறை நாட்களிலும் நடைபெறவுள்ளது. பயிற்சி வகுப்புகள் வருகிற 06.01.2018 அன்று தொடங்கப்பட உள்ளது.

ஒம்/–ஜோ.அ.ராஜநந்தினி,
துணைப்பதிவாளர்/முதல்வர்.

// உண்மை நகல் //

03/01/18

துணைப்பதிவாளர்/முதல்வருக்காக.